# புலமைப் பரிசில் மாதிரி பயிற்சி
## செயலட்டை - 01

**நேரம் - 30 நிமிடம்** **ஆசிரியர் - திரு.S.மோகன்**

வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து. அதன் **கீழ்க் கோடிடுக.**

01. உலர்த்திய பூக்களை அவிப்பதால் ஓர் ஔடதப் பானம் தயாரிக்கப்பட்டத்தக்க தாவரம்.
(1) ஆவரசு (2) கோப்பி (3) கொத்தமல்லி (4) தேயிலை

02. வயல் வேலைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவு செய்க.
(1) மண்வெட்டி, வனைசில்லு, நுகத்தடி. (2) நுகத்தடி, அரிவாள், கலப்பை.
(3) கலப்பை, செக்கு, முட்கலப்பை. (4) கைவலை, மண்வெட்டி, அரிவாள்.

03. இலங்கையில் கடற்கரை இருக்கும் ஒரு மாகாணம்.
(1) சப்பிரகமுவ மாகாணம் (2) மத்திய மாகாணம்
(3) ஊவா மாகாணம் (4) வடமேல் மாகாணம்

04. மின்காந்தம் பயன்படுத்தப்படும் ஒரு நிர்மாணிப்பு
(1) நீராவிப்படகு (2) காற்றுத் திசைகாட்டி
(3) மின்மணி (4) ஊசித்துளைக் கமரா

05. நீருக்கு இருக்கக்கூடிய ஓர் இயல்பாக **அமையாதது.**
(1) நிலையான வடிவம் இருத்தல்
(2) வெப்பமானக்கும்போது நீராவி வெளியேறல்
(3) கொண்டிஸ் தூளினால் நிறமூட்டப்படல்
(4) குளிர்த்தும் போது பனிக்கட்டியாக மாறுதல்.

06. பச்சையாக வெட்டிய எம்மரக்கறித் துண்டுகள் சிலவற்றைப் பாத்திரத்தில் உள்ள நீரில் இடும்போது அந்நீர் நிறம் பெறும்.
(1) கத்தரிக்காய் (2) பூசணிக்காய் (3) கரட் (4) பீற்றூட்

07. வானில் மிக உயரத்தில் பறக்கின்ற கூர்மையான கண்களையுடைய ஊனுண்ணும் பறவை
(1) செண்பகம் (2) கழுகு (3) ஆந்தை (4) மழைக்குருவி

08. காற்றின் மூலம் மண்ணரிப்பு அதிக அளவில் நடைபெறும் பிரதேசம்
(1) உயர்ந்த மரங்களைக் கொண்ட வனப் பிரதேசம்
(2) அதிக அளவு கட்டங்களைக் கொண்ட நகர்ப் பிரதேசம்
(3) புற்களற்ற மணற்பாங்கான பிரதேசம்.
(4) தேயிலைச் செடிகளைக் கொண்ட மலைப் பிரதேசம்.

09. பின்வரும் உடுக்கோலங்களில் மிகவும் கூடிய எண்ணிக்கையான உடுக்கள் அடங்கும் உடுக்கோலம் யாது?
(1) வேட்டைக்காரன் (2) பெருங்கரடி (3) தென்சிலுவை (4) விருச்சிகம்

10. "புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே – கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே" என்னும் பாடல்
(1) அரிவிவெட்டுப் பாடல் (2) வண்டிப் பாடல் (3) கும்மிப் பாடல் (4) மீனவர் பாடல்.


S. Mohan 0779685514
Tamil Study
S.Mohan

11. நுரைச்சோலை மின்வலு நிலையத்தின் படம் அச்சிடப்பட்டுள்ள இலங்கைக் காசுத்தாள்
(1) ரூபா 20 (2) ரூபா 50 (3) ரூபா 100 (4) ரூபா 500

12. இலங்கைக்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ள நாடுகள் மாத்திரம் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.
(1) மாலைதீவுகள், நேபாளம், பூட்டான் (2) பாகிஸ்தான், ஜப்பான், பங்களாதேஷ்
(3) இந்தியா, ரஷ்யா, நேபாளம் (4) பங்களாதேஷ், சீனா, மாலைதீவுகள்

13. செயற்கை நிறப்பொருள்கள் ,சுவையூட்டிகள் ஆகிய சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதால் ஏற்படக்கூடிய நோய்
(1) நீர்வெறுப்புநோய் (2) புற்றுநோய் (3) நெருப்புக்காய்ச்சல் (4) நீரிழிவு

14. டெங்கு நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குப் பின்பற்றக்கூடிய நடைமுறையொன்று
(1) கொதித்தாறிய நீரைப் பருகுதல்.
(2) சமைத்த உணவுகளை நன்கு மூடி வைத்தல்
(3) சூழவுள்ள சுற்றாடலைச் சுத்தப்படுத்தல்
(4) மரக்கறிகளைக் கூடுதலாக உட்கொள்ளல்.

15. எமது நாட்டின் பொதுப் போக்குவரத்துப் பேருந்தில் மதகுருமார் தவிர பயணிகள் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டு ள்ள வேறு இரு தரப்பினர் யார்?
(1) குழந்தைகள், நோயாளிகள் (2) நோயாளிகள், பாடசாலை மாணவர்கள்
(3) வலது குறைந்தோர், கர்ப்பிணித் தாய்மார். (4) முதியோர், வலது குறைந்தோர்

16. நாற்று மேடைகளிலிருந்து நாற்றுகள் பெறப்பட்டுப் பாத்திகளில் நடப்படுகின்ற பயிர்வகைகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) போஞ்சி, வெண்டி, பசளி. (2) போஞ்சி, தக்காளி, கறிமிளகாய்
(2) கத்தரி, பசளி, தக்காளி. (4) கறிமிளகாய், கத்தரி, தக்காளி

17. வீதி நிறச் சமிக்ஞைக் கம்பத்தில் மேலிருந்து கீழாக நிறச் சமிக்ஞை அமைந்துள்ள சரியான ஒழுங்கு முறையைத் தெரிவுசெய்க.
(1) சிவப்பு, மஞ்சள், பச்சை (2) பச்சை, மஞசள், சிவப்பு
(3) மஞ்சள், சிவப்பு, பச்சை (4) மஞசள், பச்சை, சிவப்பு

18. “ உலைத்துருத்தியைப்’’பயன்படுத்துபவர்.
(1) தச்சன் (2) மீனவர் (3) மேசன்மார் (4) கொல்லர்

19. காற்றின் மூலம் தொழிற்படும் சங்கீத உபகரணம்
(1) கடம் (2) கொம்பு வாத்தியம் (3) தவில் (4) உடுக்கு

20. இலங்கையில் அனைத்து அரச பாடசாலை மாணவர்களுக்கும் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுவன.
(1) சீருடை, பகல் உணவு (2) பகல் உணவு, பாடநூல்.
(3) பாடநூல், சீருடை (4) புலமைப்பரிசில், பகல் உணவு

21. வெடித்தல் மூலம் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட தாவரம்
(1) சோளம் (2) எண்ணெய் (3) கமுகு (4) குன்றிமணி

22. மைதானத்தின் நடுவில் பொருத்தப்படும் வலையில் இருபக்கங்களிலும் இருந்து விளையாடப்படும் **இரு விளையாட்டுகள்.**
(1) வலைப்பந்து, பட்டமின்டன். (2) வொலிபோல், பட்மின்டன்
(3) வலைப்பந்து, கூடைப்பந்து (4) வொலிபோல், வலைப்பந்து.

 S. Mohan 0779685514
Tamil Study

23. கிறுக்கல் கவிதைகள், சுவரோவியங்கள் ஆகியன காணப்படும் வரலாற்றுப் பிரசித்திபெற்ற இடம்

(1) சீகிரியா (2) யாப்பகூவா (3) இசுறுமுகி (4) எம்பக்க

24. வீட்டினுள்ளே இயற்கையான குளிர்காற்றைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் முறையாக அமையாதது ?

(1) வீடுகளில் யன்னல்களைப் பொருத்துதல்.
(2) மின் விசிறிகளைப் பயன்படுத்தல்.
(3) சுவர்களின் மேலே காற்றுவெளிகளை இடுதல்.
(4) கதவு நிலையின் மேலே இடைவெளிகளை விடுதல்.

25. பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் விலங்குகள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவுசெய்க.

(1) முசிறு, எறும்பு, தேனீ.
(2) கரப்பான், வீட்டுஈ, மூட்டைப்பூச்சி
(3) தண்டுகோதி, ஏபிட்டு, வெண்மூட்டைப்பூச்சி
(4) மூட்டைப்பூச்சி, பேன், உண்ணி.

26. பின்வரும் உணவுப் பொருள்களுள் உற்பத்தித் திகதிக்கும் காலாவதியாகும் திகதிக்குமிடையே குறைந்த காலத்தைக் கொண்டது எது ?

(1) ரின்மீன் (2) யோகட் (3) ஜாம் (4) பாற்கட்டி

27. வெளிநாட்டில் வசிக்கும் உமது பேனா நண்பன் தலதா பெரகராப் படம் ஒன்றை இயன்ற வரை துரிதமாக அனுப்புமாறு உங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளான். இதற்காக நீங்கள் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை பின்வருவனவற்றுள் எது ?

(1) விமானத்தபால் (2) கடற் தபால் (3) கடுகதித் தபால் (4) மின்னஞ்சல்

28. இலங்கையின் தேசிய பறவையாகக் காட்டுக்கோழியைத் தெரிவு செய்தமைக்கான பிரதான காரணம் யாது?

(1) எமது நாட்டில் அதிகமாகக் காணப்படுகின்றமை.
(2) இந்நாட்டிற்கே உரித்தானதாக இருக்கின்றமை.
(3) எல்லாப் பிரதேசங்களிலும் காணப்படக்கூடியதாக உள்ளமை.
(4) மிக்க பயனுடையதாக இருக்கின்றமை.

29. கடந்த காலங்களில் எமது நாட்டை ஆட்சி செய்த வெளிநாட்டவர்களை ஒழுங்குமுறையாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்.
(2) ஒல்லாந்தர், போத்துக்கேயர், ஆங்கிலேயர்.
(3) ஆங்கிலேயர், போத்துக்கேயர், ஒல்லாந்தர்,
(4) போத்துக்கேயர், ஆங்கிலேயர், ஒல்லாந்தர்,

30. "கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் சிறிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்காகவும் எனது மனதில் தோன்றிய ஆர்வம் எனது வீட்டிலுள்ள அனைவரது மனங்களிலும் தோன்றட்டும்!" இந்த எண்ணம் மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் எந்தப் படிமுறைக்கு உரியது ?

(1) மனதைத் தளர்த்தல் (2) மனவுறுதி (3) பிரார்த்தனை (4) மலர்வு

31. இளஞ்சிவப்பு நிறத் தளிர்களை உருவாக்கும் தாவரம்

(1) எலுமிச்சை (2) நாகமரம் (3) வெற்றிலை (4) பலா

32. ஒரு வித்தினை மாத்திரம் கொண்ட பழம்

(1) நெல்லி (2)விளாம்பழம் (3) மங்குஸ்தான் (4) மாதுளை


S. Mohan 0779685514
Tamil Study
S.Mohan

33. ஒரு குறித்த காலத்தில் அன்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவர வகை பின்வருவனவற்றுள் எது?
(1) இறப்பர் (2) தென்னை (3) முள்முருக்கு (4) ரம்புட்டான்.

34. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் விலங்கு
(1) ஆந்தை (2) பருந்து (3) வண்ணாத்திப்பூச்சி (4) நத்தை

35. பெரும்பாலும் ஆடைகளில் அல்லது விலங்குகளின் உடல்களில் ஒட்டி பரம்பலடையும் வித்து
(1) எண்ணை (2) துத்திரி (3) காசித்தும்பை (4) எருக்கலை

36. செதுக்கப்பட்ட விலங்குகளின் வரிசையைக் கொண்ட மிகச் சிறந்த கலைப் படைப்பு
(1) கல்லேடு (2) நிறைகுடம்
(3) சந்திரவட்டக்கல் (4) தொல்பொருளியல் இலட்சினை

37. இலங்கையில் காணப்படும் வணக்கத்துக்குரியது அல்லாத வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடம்
(1) ருவன்வெலிசாய (2) காலிக்கோட்டை (3) சிவனொளிபாதம் (4) தூபாராமை

38. இலங்கைக்குக் கிழக்கே காணப்படும் ஒரு நாடு
(1) மலேசியா (2) இந்தியா (3) இங்கிலாந்து (4) கிரீஸ்

39. பின்வரும் எந்த விளையாட்டில் கைக்கவசம், காற்கவசம் என்பன அணியப்படுகின்றன ?
(1) எல்லே (2) கரப்பந்து (3) கிரிக்கெற் (4) பட்மின்டன்

40. “நீர்ப்பிசாசு” அமைப்பு யாருக்குப் பயன்படும்
(1) விவசாயிகளுக்கு (2) சுழியோடிகளுக்கு (3) மீனவர்களுக்கு (4)நீச்சல் வீரர்களுக்கு

41. தனிப்பட்ட வகையில் ஒருவர் பயன்படுத்தவேண்டிய பொருள்கள் இரண்டு.
(1) தொலைபேசி, பேனை (2) சீப்பு, பற்தூரிகை (3) சீப்பு, குடை (4) குடை, பற்தூரிகை

42. உடல் வளர்ச்சியில் கூடிய பங்களிப்புச் செய்யும் உணவுப் பொருள்களின் கூட்டம்
(1) சோறு, சீனி, பாசிப்பயறு (2) பருப்பு, பசளி, வல்லாரை
(3) பருப்பு, பாசிப்பயறு, சோயா அவரை (3)மாம்பழம், அன்னாசி, தோடம்பழம்

43. இறைச்சியை நீண்ட காலம் வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டைய முறை.
(1) உப்புக் கரைசலில் அமிழ்த்தி வைத்தல். (2) அவித்தல்
(3) தேனில் அமிழ்த்தி வைத்தல். (4) சுவையூட்டிகளைச் சேர்த்தல்.

44. பண்டைய அரசர்களினால் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனக் கைத்தொழில் மூலம் எமது நாட்டில் பிரதானமாகச் செய்யப்படும் ஓர் உற்பத்தி
(1) தேயிலை (2) உப்பு (3) மரக்கறி (4) அரிசி

45. நீர்வெறுப்பு நோய் ஏற்படுவதற்குக் காரணமான நோய்க் கிருமிகளை மனித உடலினுள் பின்வரும் எப்பிராணி புகுத்துகின்றது?
(1) நுளம்பு (2) கரப்பான் பூச்சி (3) பூனை (4) வீட்டு ஈ

46. இலங்கையில் பரவும் பெரும் எண்ணிக்கையான கொள்ளை நோய்களுக்குக் காரணமாக அமையும் பிராணி வகை ?
(1) எலி (2) நாய் (3) நுளம்பு (4) ஈ

47. பிரபல எழுத்தாளராகவும் வானியல் விஞ்ஞானியாகவும் உலகிற்குச் சிறந்த சேவையாற்றியவர்
(1) சேர்.ஆதர்.சி.கிளாக் (2) சேர்.டீ.பி.ஜயதிலக
(3) கலாநிதி.ரீ.பீ.ஜாயா (4) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி


S. Mohan 0779685514
Tamil Study

புலமைப் பரிசில் மாதிரி பயிற்சி
பகுதி - I

நேரம் - 45 நிமிடம் ஆசிரியர் - திரு.S.மோகன்

மாணவர் பெயர் : ........................................................

**பின்வரும் கவிதையை கருத்திற் கொண்டு விடை தருக**

மரங் கொடியினைத் தழுவிவரும் தென்றல் காற்று சுகம் தரும்
உரமான எம் உடல் உளத்திற்கு புத்துணர்வையும் தரும் இந்த
உண்மையை உணர்ந்து மரங் கொடிதனை எம்முயிர் போல் காக்கும்
கடமையினைச் செய்தே உன்னத செயலாம

01. எமது உடலிற்கும் உள்ளத்திற்கும் புத்துணர்வைத் தருவது

(1) மரங்கொடி (2) தென்றல் காற்று (3) உன்னத செயலைச் செய்தல்

02 .இக் கவிதை பிரதானமாக எமக்குக் கூறுவது
(1) உடல் உள்ளத்திற்கு புத்துணர்வு தரும் தென்றல் காற்று பற்றி
(2) மரங் கொடியைத் தென்றல் காற்று தழுவி வருவது பற்றி
(3) சூழலில் மரங் கொடியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி

A யிற்கும் B யிற்கும் பதிலாக மிகப்பொருத்தமான சொற் சோடியைத் தெரிவு செய்க

03.

| காய்கறி | பழம் | A |
|---|---|---|
| B | மாம்பழம் | அரிசி |
| பாகற்காய் | வாழைப்பழம் | பயறு |

(1)தானியம்,, கரட் (2) சோளம் , புடோல் (3) வாசனைச்சரக்க , கறுவா

04.

| A | கப்பல் | ஆகாய விமானம் |
|---|---|---|
| குதிரை | திமிங்கிலம் | B |

(1) வண்டி பருப்பு (2) சைக்கிள் பட்டம் (3) கிளி லொறி

**வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க .**

05. **அம்மா** காய்கறிகளைக் கொண்டுவருவதற்குச் சந்தைக்குச் சென்றார் பிள்ளைகள் கற்பதற்கு பாடசாலைக்கச் சென்றனர்
**அம்மா : பிள்ளைகள்** எனின் சந்தைக்கு : ....................
(1) காய்கறிகள் (2) பாடசாலைக்கு (3) கற்பதற்கு

06. நல்ல **பிள்ளைகள்** ஆசிரியரின் வார்த்தைகளைச் செவிமடுக்கின்றனர் பிரசித்திபெற்ற பாடகர் இனிமையான குரலில் பாட்டுப் பாடினார்
**பிள்ளைகள் : பாடகர்** எனின் செவிமடுக்கின்றனர் :.....................
(1) குரலில் (2) பாட்டு (3) பாடினார்


Tamil Study

**அடைப்புகக்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றன்மீதொன்யாக வைக்கும் போது கிடைக்கும் உருக்களைத் தெரிவு செய்க**

07.   (1) 806 (2) 608 (3) 860

08.  

(1) OHT (2) COT (3) HOT

**வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

09. | 2 | 4 | 6 |  | 3 | 5 | 7 |  | 4 | 6 | 8 | :………………..

| | | |
|---|---|---|
| 5 | 6 | 7 |

(1)

| | | |
|---|---|---|
| 5 | 7 | 9 |

(2)

| | | |
|---|---|---|
| 6 | 8 | 9 |

(3)

10. ஞாயிற்றுக்கிழமை செவ்வாய்க்கிழமை வியாழக்கிழமை சனிக்கிழமை ……….. ………..

(1) செவ்வாய்க்கிழமை வியாழக்கிழமை (2) திங்கட்கிழமை புதன்கிழமை
(3) ஞாயிற்றுக்கிழமை திங்கட்கிழமை

11. ரூபா 245 க்கு DEM எனவும் ரூபா 130 க்கு CLN எனவும் ஆங்கில எழுத்துகளைப் பயன்பமுத்திக் குறிபடபிடப்பட்டுள்ள இதற்கேற்ப ரூபா 435 குறிப்பிடப்பட்டுள்ள விதம் யாது ?

(1) ELM (2) ECM (3) MCL

12. உருவில் உள்ள தின்மத்தில் இருக்கம் மேற்பரப்பக்களின் எண்ணிக்கை யாது ?



(1) 10 (2) 12 (3) 14

13. கண்ணன் 14 விசுக்கோத்தப் பெட்டிகளைக் கடையில் வாங்கி வீட்டிற்குக் கொண்டுவரவேண்டி இருந்தது அவன் ஒரு தடைவ 4 விசுக்கோத்துப் பெட்டிகளை மாத்திரம் கொண்டு வரலாம் இதற்கேற்ப எல்லா விசுக்கோத்துப் பெட்டிகளையும் கொண்டு வருவதற்கு அவன் குறைந்தபட்சம் எத்தனை தடைவ செலல வேண்டும்

(1) 3 (2) 4 (3) 5



Tamil Study

14. சிறுவன் ஒருவன் ஒரு பூப்பாத்தியை அமைப்பதற்கு ஓர் இடத்திலிருந்து வடக்கு நோக்கி 3 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து கிழக்கு நோக்கி 3 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து தெற்கு நோக்கி 6 மீற்றருக்கம் அவ்விடத்திலிருந்து தொடக்கத் தானத்திற்கும் ஒரு கயிற்றை இழுத்துத் தரையில் அடையாளமிட்டான். அப்பூப்பாத்தியின் வடிவத்தைத் தெரிவு செய்க



(1) (2) (3)

15. உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு தாளை முறித்த கோடு வழியே இரண்டாக மடித்து இரு தாள்களினூடாகவும் துளைகளிடப்பட்டன



அதனை முன்னர் இருந்தவாறு பிரிக்கம் போது அது காணப்படும் விதம் யாது ?



(1) (2) (3)

16. தரப்பட்டுள்ள கவிதையின் நான்கு வரிகளின் சரியான ஒழுங்கு முறை யாது ?

(W) அங்கே சென்று கற்பதால் (M) அறிவு மேலும் வளருமே
(N) எங்கள் பள்ளிக் கூடமே ( H) எளிமை மிக்க நிலையமே

(1) WNMH (2) NHWM (3) NWMH

**17 , 18ஆகிய வினாக்களுக்குப் பின்வரும் தகவல்களைக் கொண்டு விடை தருக.**

2 வாழைப்பழங்களின் விலை ரூபா 30 ஆகும் ஒரு கொய்யாப்பழத்தின் விலை ஒரு வாழைப்பழத்தின் விலையிலும் பார்க்க ரூபா 5 இனால் கூடியது ஒரு மாம்பழத்தின் விலை ஒரு கொய்யபப்பழத்தினதும் ஒரு வாழைப்பழத்தினதும் விலைகளின் மொத்தத்திற்குச் சமம் எனின்

17. ஒரு கொய்யாப்பழத்தின் விலை யாது ?

(1 ) 20 (2) 15 (3) 10

18. ஒரு மாம்பழத்தின் விலை யாது ?

(1) 35 (2) 40 (3) 45



Tamil Study

19. உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கையும் செவ்வகங்களின் எண்ணிக்கையும் முறையே



(1) 3, 3 ஆகும் (2) 3, 5 ஆகும் (3) 2, 5 ஆகும்

20. தரப்பட்டுள்ள வடிவங்களில் மூன்றைச் சேர்த்து ஒரு செவ்வகத்தை அமைக்கலாம் அவ் வடிவங்கள் யாவை ?




(1) 1 , 2 , 4 (2) 2 , 3 , 4 (3) 1 , 3, 5

21. அடைப்பில் உள்ள மிகச்சிறிய ஒற்றை எண்ணை மிகப்பெரிய இரட்டை எண்ணால் பெருக்கும்போது கிடைக்கும் விடை யாது ?

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 5 | 4 | 23 | 15 |
| 7 | 19 | 33 | 8 | 3 |
| 10 | 2 | 30 | 17 | 29 |

(1) 90 (2) 58 (3) 50

22. 2013 ஆம் ஆண்டில் நடுவில் வரும் தினம் யாது ?
(1) யூன் 30 (2) யூன் 01 (3) யூலை 02

23. ஒக்டோபர் 01 உலக சிறுவர் தினமாகும். 2013 ஆம் ஆண்டில் ஜனவரி 01 தொடக்கம் ஒக்டோபர் 01 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது ?
(1) 273 (2) 274 (3) 275

24. 10 படிகள் உள்ள ஒரு படிக்கட்டில் A முதல் படியிலும் B பத்தாம் படியிலும் நிற்கின்றனர் A ஒரு படியில் ஏறும் போது B இரு படிகள் இறங்கினால். அவர்கள் இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பர் ?
(1) 4 (2) 5 (3) 6

25. மோகனும் ரவியும் ஒரு வட்ட ஓட்டப் பந்தயப் பாதையில் ஓட்டத்தை ஆரம்பித்தனர். ரவி அரைச் சுற்று ஓடும் போது மோகன் ஒரு சுற்றை ஓடி முடித்து முன்னோக்கி வந்து ரவியைக் கடந்தான் . இதற்கேற்ப

(1) மோகனின் கதி ரவியின் கதியின் மூன்று மடங்காகும்
(2) மோகனின் கதி ரவியின் கதியின் இரு மடங்காகும்
(3) ரவியின் கதி மோகனின் கதியின் மூன்று மடங்காகும்

**தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக சோடிச் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க**

26. அறிவு - பொழுதுபோக்கு


(1)


(2)


(3)


Tamil Study
S. Mohan 0779685514

27. ஒளி - வெப்பம்


(1)


(2)


(3)

**வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

28. வெற்றியினால் ......................................அடைந்த இரசிகர்கள் ..........................

(1) மகிழ்ச்சி - கைதட்டினர்

(2) களைப்பு - வாழ்த்தினர்

(3) இன்பம் - கண்ணீர் விட்டனர்

**உவமானத்திற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.**

29. “ எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல்”

(1) சிக்கலைத் தீர்க்க உதவுதல்.

(2) மேலும் கோபமூட்டச் செய்தல்

(3) வறியவர்களுக்குப் பண உதவி செய்தல்

30.’’ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போல’’

(1) செய்ய முடியாத செயலைச் செய்ய முயலுதல்

(2) மிக ஊக்கத்துடனும் தைரியத்துடனும் செயற்படுதல்

(3) பெரிய வேலையைச் செய்யத் தொடங்குதல்.

31. 200 இல் அறைவாசியின் ¼ உடன் 5 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது ?

(1) 25 (2) 30 (3) 35

32. தாயார் ஒருவர் தன்னிடத்தில் இருந்த பணத்தில் ½ ஐப் புத்தகங்கள் வாங்கச் செலவளித்தார் அதன் பின்னர் அவர் மீதிப்பணத்தை இருசம பகுதிகளாகப் பிரித்து அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்கச் செலவளித்தார்.பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூபா 50.00 எனின் அவர் புத்தகங்கள் வாங்கச் செலவளித்த பணம் யாது ?

(1) ரூபா 50.00 (2) ரூபா 100.00 (3) ரூபா 200.00

33. தொடக்கம் 45 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகள் யாவை ?

(1) 4 (2) 5 (3) 6


Tamil Study

34. உருவில் காட்டப்பட்டவாறு இரு நுனிகள் சந்திக்குமாறு ஒரு கம்பியை வளைத்துப் பெறத்தக்க வடிவம் யாது ?




35. முறிந்த கோடுகளினால் காட்டப்பட்டுள்ள மூன்று பாதைகளில் நீளம் குறைந்த பாதை யாது ?




36. சதுரமுகியை அமைக்கத்தக்க உருவைத் தெரிவு செய்க ?




37. தந்தையார் மாம்பழத்தை, அன்னாசிப்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் தோடம் பழத்தை விரும்புவதில்லை.தாயார் தோடம்பழத்தையும், மாம்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் அன்னாசிப்பழத்தை விரும்புவதில்லை.நான் விளாம்பழத்தையும், மாம்பழத்தையும் விரும்புகின்றேன். நாம் மூவரும் விரும்பும் பழம்.

(1) விழாம்பழம் (2) தோடம்பழம் (3) மாம்பழம்

38. முரளியின் வீட்டில் உள்ள கடிகாரத்தின் நேரம் குறித்த நேரத்திரும் பார்க்க 10 நிமிடம் பிந்தியது இதற்கேற்ப முற்பகல் 6.30 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட முரளி பாடசாலைக்குச் செல்லும் போது சரியான நேரத்தைக் காட்டும் பாடசாலைக் கடிகாரத்தின் நேரம் முற்பகல் 7.10 ஆக இருந்தது அவன் வீட்டிலிருந்து பாடசாலைக்கச் செல்வதற்கு எடுத்த நேரம் எத்தனை நிமிடம் ?

(1) 50 (2) 40 (3) 30

பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் A,D,E,F,H என்னும் ஐந்து ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக 12345 எனும் இலக்கங்கள் (இதே ஒழுங்கில் அன்றி) இடப்பட்டு அவ்விலக்கங்கள் ஏறுவரிசையில் எழுதப்பட்டுள்ளன.

HEAD = 1235

FEED = 1134

39. எழுத்து E இற்கு பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது ?

(1) 1 (2) 3 (3) 5

40. எழுத்து D இற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது ?

(1) 1 (2) 3 (3) 5

 Tamil Study S. Mohan 0779685514

# புலமைப் பரிசில் மாதிரி பயிற்சி
## செயலட்டை - 03

நேரம் - 30 நிமிடம் ஆசிரியர் - திரு.S.மோகன்

வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து. அதன் **கீழ்க் கோடிடுக.**

01. பின்வரும் எத்தாவரம் இயற்கையாகவே ஒரு சுவையான பானத்தை எமக்குத் தருகின்றது ?
(1) தோடை (2) எலுமிச்சை (3) செவ்விளநீர் (4) விளா

02. பின்வரும் எவ்விலங்கு பொருளாதாரரீதியில் பயன்தரும் ஓர் உற்பத்திப் பொருளை ஆக்குகின்றது ?
(1) தேனீ (2) வண்ணத்துப்பூச்சி (3) வெட்டுக்கிளி (4) குளவி

03.ெற்றுகளை உண்டாக்கும் தாவரம்
(1) பயற்றை (2) சிறகவரை (3) வெண்டி (4) போஞ்சி

04. உடல் வளர்ச்சிக்குரிய உணவு
(1) சோறு (2) கரட் (3) அன்னாசி (4) பயறு

05. கூட்டுப்பசளையைச் செய்யப் பயன்படுத்தும் பொருள்
(1) பொலித்தீன் (2) இலைகுழைகள் (3) தகரத் துண்டுகள் (4) கண்ணாடித் துண்டுகள்

06. தேசிய கீதத்தைப் பாடும்போது நாம் நிற்க வேண்டிய முறை
(1) இலகுவாக நிற்றல் (2) கவனமாக நிற்றல் (3) பொறுமையாக நிற்றல் (4) ஒழுங்காக நிற்றல்

07. இலங்கை அரச இலச்சினையில் சூரியனும் சந்திரனும் அடையாளப்படுத்துவது
(1) சௌபாக்கியத்தை ஆகும் (2) தன்னிறைவை ஆகும்
(3) நிலைத்திருத்தலை ஆகும் (4) கட்டுப்பாடான நாட்டு மக்களை ஆகும்

08. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளின் மூன்றாவது படிமுறை யாது ?
(1) மனதைத் தளர்த்துதல் (2) மனவுறுதி (3) பிரார்த்தனை (4) மலர்வு

09. நுளம்புகள் காரணமாகப் பரவும் நோய்கள் மாத்திரம் இடம் பெறும் விடையைத் தெரிவு செய்க.
(1) மலேரியா, டெங்கு, யானைக்கால் நோய் (2) மலேரியா, காய்ச்சல், கொள்ளை நோய்
(3) காய்ச்சல், கொள்ளை நோய் டெங்கு, (4) டெங்கு, மலேரியா, காய்ச்சல்,

10. செவிகளின் ஊடாக மாத்திரம் தகவல்களைப் பெறுவதற்காக எமக்குத் தகவல்களை வழங்கும் ஊடகம்
(1) வானொலி (2) செய்தித்தாள் (3) கணினி (4) தொலைக்காட்சி

11. பின்வரும் பொருள்களை நீரில் இடும்போது நீரில் மிதக்கும் பொருள் யாது ?
(1) பனிக்கட்டி (2) கண்ணாடித் துண்டு (3) கல் (4) இரும்பு ஆணி

12. வேலையை இலகுவாக்கும் பொறியையும் அப்பொறியுடன் தொடர்புபட்ட தொழிற்பாட்டையும் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) கம்பி - தள்ளுதல் (2) பாக்குவெட்டி - இழுத்தல்
(3) கைவண்டி – தள்ளுதல் (4) திருகாணி செலுத்தி - இழுத்தல்


S. Mohan 0779685514
Tamil Study

13. மண்ணரிப்பு ஏற்படுவதில் பின்வரும் எச்செயல் செல்வாக்குச் செலுத்துகின்றது ?
(1) கான்களை வெட்டல் (2) மரங்களை வெட்டுதல்
(3) புற்களை வளர்த்தல் (4) கல்வேலியை அமைத்தல்

14. "மின்னலினால் விபத்து ஏற்படுகின்றது" என்பதற்குப் பயன்படுத்தப்படும் உருவக்குறியீடு யாது ?


(1)


(2)


(3)


(4)

15. துளைக் கமராவின் திரையைச் செய்யப் பயன்படுவது
(1) நிறத் தாள் (2) வெள்ளை அட்டைத்தாள் துண்டு
(3) வெள்ளைத் திசுத் தாள் (4) உலோகத் தகடு

16. ஒரு பெரிய டயர் பழையதாகும் போது அது சூழலுக்கு நேயமான விதத்தில் அமைவதற்குச் செய்ய வேண்டிய ஒரு செயல்
(1) வீடுகளின் கூரைகளின் மேலே வைத்தல் (2) வெளியான இடங்களில் ஒழுங்காக அடுக்கி வைத்தல்
(3) இரவு வேளைகளில் எரித்து விடுதல். (4) இடவசதி குறைவான இடங்களில் பயிரிடப் பயன்படுத்தல்

17. ஒரு கண்ணாடிக் குவளையில் உள்ள குளிர் நீர் மீது சிறிதளவு தேயிலையை இடும்போது அந்நீர் விரைவாகக் கடுங் கபிலநிறமாக மாறியது. அத்தேயிலை வகை பற்றி என்ன கூறலாம்?
(1) தரம் குறைந்தது. (2) தரம் கூடியது
(3) கூடியளவு தேயிலைச் சாயத்தைக் கொண்டது. (4) உரிய தரத்தை உடையது.

18. வானவில்லில் உள்ள மூன்று நிறங்கள்.
(1) சிவப்பு, கறுப்பு, நீலம் (2) நீலம், மஞ்சள், பச்சை
(3) சிவப்பு, பச்சை, வெள்ளை. (4) மஞ்சள், நீலம், கபிலம்.

19. ஒலிம்பிக் கொடியில் உள்ள ஒன்றோடொன்று இணைந்த வட்டங்களின் எண்ணிக்கை
(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

20. கதிர்காமப் புனிதநகர் அமைந்துள்ள மாகாணம்
(1) தென் மாகாணம் (2) சப்ரகமுவ மாகாணம் (3) கிழக்கு மாகாணம் (4) ஊவா மாகாணம்

21. மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்தவர்
(1) மகாசேன மன்னன் (2) தாதுசேன மன்னன்
(3) தேவநம்பியதீச மன்னன் (4) துட்டகைமுனு மன்னன்

22. 'இலவசக் கல்வியின் தந்தை" எனப் பெயர் பெற்றவர்
(1) சேர்.டீ.பீ .ஜயத்திலக்க (2) கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி
(3) கலாநிதி சீ.டபிள்யூ. டபிள்யூ.கன்னங்கரா (4) கலாநிதி ரீ.பீ.ஜாயா

23. எல்லா இலங்கை நாணயத் தாள்களிலும் கையொப்பமிடுபவர்கள்
(1) சனாதிபதியும் பிரதம மந்திரியும்.
(2) பிரதம மந்திரியும் நிதி அமைச்சரும்.
(3) நிதி அமைச்சரும். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்
(4) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் திறைசேரிச் செயலாளரும்.


Tamil Study

24. நாம் ஏன் விலங்குகளைத் **துன்புறுத்தவாகாது** ?
(1) விலங்குகளிலிருந்து பயனைப் பெற்றுக்கொள்ள முடியுமாதலால்.
(2) விலங்குகளிடமிருந்து நாம் பாடம் படிக்கத்தக்கதாக இருக்கின்றமையால்.
(3) விலங்குகளும் எம்மைப் போல் வாழ விரும்புகின்றமையால்.
(4) விலங்குகள் அழகானவையாக இருக்கின்றமையால்.

25. பின்வருவனவற்றில் எது நீருடன் பிணைந்த கலாசாரப் பழக்கமன்று ?
(1) தமிழ் - சிங்களப் புத்தாண்டில் கிணற்றுடன் கொடுக்கல் வாங்கல் செய்தல்.
(2) திருமணங்களின் போது இரு பாதங்களையும் கழுவி மணமகனை உபசரித்தல்.
(3) சில மதத்தவர் இறந்த பின்னர் இறந்த உடலைக் குளிப்பாட்டல்
(4) தலைமயிரை வெட்டி நீர்ப் பாத்திரத்தில் இடுதல்.

26. பின்வருவனவற்றில் எது பாதுகாப்பு அற்ற சந்தர்ப்பமாகும் ?
(1) நடைபாதையில் நடந்து செல்லல்.
(2) வீதி சமிக்ஞைப் பலகையில் பச்சைநிற மனிதன் காட்சிப்படுத்தப்படும் போது பாதையைக் கடத்தல்.
(3) வீதியில் நடந்து செல்லும்போது தமது வலப்பக்கத்தில் செல்லுதல்.
(4) புகையிரதப் பாதையில் நடத்தல்.

27. நீரில் மூழ்கிய ஒருவருக்கு முதலுதவி அளிக்கும்போது முதலில் செய்ய வேண்டியது யாது ?
(1) ஈர உடையை அகற்றல். (2) போர்வையினால் உடலின் வெப்பத்தைப் பாதுகாத்தல்.
(3) நன்றாகச் சுவாசிப்பதைச் சோதித்தல் (4) சூடான பானத்தைக் குடிக்கக் கொடுத்தல்.

28. வித்துகளின் மூலமும் கிளைகளின் மூலமும் முளைக்கச் செய்யப்படும் தாவரம் எது ?
(1) பாகல் (2) பசளி (3) தக்காளி (4) புடோல்

29. காற்றின் மூலம் பரம்பல் அடையும் தாவரம்
(1) மரமுந்திரிகை (2) தேக்கு (3) கொய்யா (4) எருக்கலை

30. இலங்கைக்கேயுரிய விலங்கு
(1) நீலப் புள் (2) கிளி (3) குயில் (4) கொக்கு

31. இரவில் உலாவித் திரியும் விலங்கு
(1) ஊர்க்குருவி (2) மலைநாகணவாய் (3) காகம் (4) நத்தை

32. நன்றாக முற்றிய வித்தினை இனங்காணத்தக்க ஓர் இயல்பு பின்வருவனவற்றில் எது ?
(1) நீரைக் கொண்ட பாத்திரத்தில் இடும்போது வித்து அமிழ்ந்து போதல்.
(2) வித்தில் இடையிடையே புள்ளிகள் இருத்தல்.
(3) வித்தின் நிறம் கருநிறமாக இல்லாமை.
(4) வித்தினை எளிதாக மாவாக்கத்தக்கதாக இருத்தல்.

33. தச்சுத் தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணம்.



34. மரவள்ளிக் கிழங்கில் அதிக அளவில் அடங்கும் போசணைப் பொருள்.
(1) விற்றமின்கள் (2) காபோவைதரேற்றுகள்
(3) உப்புகள் (4) புரதங்கள்

S.Mohan


Tamil Study
S. Mohan 0779685514

35. இறைச்சியை மாத்திரம் உணவாகக் கொள்ளும் விலங்கு
(1) நாய் (2) பூனை (3) பல்லி (4) சிங்கம்

36. பின்வரும் உருவில் உள்ள தாவரம் யாது ?



(1) நெல் (2) வெங்காயம்
(3) நீர் முள்ளி (4) வெட்டிவேர்

37. இத்தையல் முறைக்கு வழங்கும் பெயர்.



(1) சங்கிலித் தையல் (2) வெட்டுக்குத்துத் தையல
(3) கம்பளித் தையல் (4) நரம்புத் தையல்

38. வீதியில் உள்ள மின் சைகைப் பலகையில் சிவப்பு நிறம் ஒளிர்வதனால் குறிப்பிடப்படுவது யாது ?
(1) வாகனத்தைச் செலுத்துகு என்பது (2) வாககத்தை நிறுத்துக என்பது
(3) வாகனத்தைச் செலுத்தத் தயாராக என்பது (4) வாகனத்தை வலமாகத் திருப்புக என்பது.

39. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித நகர்
(1) அனுராதபுரம் (2) நுவரெலியா (3) சீகிரியா (4) வவுனியா

40. இலங்கைக்கு அண்மையில் இருக்கும் நாடு
(1) சவுதி அரேபியா (2) ஜப்பான் (3) இந்தியா (4) கனடா

41.இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் இருக்கும் இடம்
(1) கட்டுநாயக்கா (2) மத்தள (3) இரத்மலானை (4) வீரவில

42. இலங்கையில் விலங்குகளை வளர்த்துபட பால் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலை இருக்கும்
(1) வெலிசறை (2) மகா இலுப்பள்ளம (3) கங்வெல்ல (4) அம்பேவெல

43. சூரியனுக்கு அண்மையில் இருக்கும் கோள்
(1) புவி (2) சுக்கிரன் (3) புதன் (4) செவ்வாய்

44. இலங்கைத் தேசப்படத்தில் சரணாலயம் எந்நிறத்தினால் குறிக்கப்பட்டிருக்கும் ?
(1) கறுப்பு (2) பச்சை (3) சிவப்பு (4) நீலம்

45. சூழலுக்கு நேயமான பூச்சிநாசினியைத் தயாரிப்பதற்கு மிகவும் பொருத்தமான வித்து வகை
(1) பப்பாசி வித்து (2) வேப்பம் வித்து (3) ஆமணக்கு வித்து (4) சிறகவரை வித்து

46. கழிச்சல் நோயை உண்டாக்குவது
(1) இலையான் (2) சிலந்தி (3) நுளம்பு (4) வண்டு

47. கழிச்சல் நோயை உண்டாக்குவது
(1) இலையான் (2) சிலந்தி (3)நுளம்பு (4) வண்டு

48. தேவநம்பிய தீச மன்னனால் கட்டுவிக்கப்பட்டது
(1)திசாவாவி (2) யோதவாவி (3) கந்தளாய்க் குளம் (4) மகாகணதரா வாவி

49. சிறிய தீக்காயத்திற்குப் பயன்படுத்தப்படும் மூலிகை
(1) ஆவரசு (2) பாவட்டை (3) சாத்தாவாரி (4) கற்றாளை

S. Mohan


Tamil Study

# புலமைப் பரிசில் மாதிரி பயிற்சி
## செயலட்டை - 04

நேரம் - 30 நிமிடம் ஆசிரியர் - திரு.S.மோகன்

வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து. அதன் **கீழ்க் கோடிடுக.**

01. கொலாஜ் ஆக்கம் என்பது.
    (1) நீர்ச்சாயங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆக்கம்.
    (2) கோடுகளின் மூலம் வரையப்படும் ஆக்கம்.
    (3) பஸ்ரலைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆக்கம்.
    (4) கடதாசித் துண்டுகளைக் கிழித்து ஒட்டிச் செய்யப்படும் ஆக்கம்.

02. நீல நிறத்தையும் சிவப்பு நிறத்தையும் கலந்து உண்டாக்கப்படும் நிறம்
    (1) கறுப்பு (2) வெள்ளை (3) கபிலம் (4) ஊதா

03. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பாதுகாக்க மிகவும் உகந்த முறை
    (1) மரத்தின் கீழே நிற்றல் (2) நீரினுள் இருத்தல்
    (3) வீட்டில் கட்டிலின் மீது இருத்தல் (4) சமவெளியான நிலத்தில் உலாவுதல்

04. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் குறியீடு
    (1) அரசம் இலை (2) அன்னம் (3) சூரியன் (4) நாகபாம்பு

05. நீர் வடிகட்டியைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணத் தொகுதியைத் தெரிவு செய்க.
    (1) பெரிய பிளாத்திபக்குப் போத்தல், பஞ்சுத் திரள், பரல் படை, மணற் படை
    (2) பெரிய பிளாத்திபக்குப் போத்தல், பரல் படை, சில செங்கற் துண்டுகள், மணட் படை.
    (3) பெரிய பிளாத்திபக்குப் போத்தல், பஞ்சுத் திரள், சில செங்கற் துண்டுகள், சிறிதளவு களிமண்.
    (4) பெரிய பிளாத்திபக்குப் போத்தல், பரல் படை, சில செங்கற் துண்டுகள், சிறிதளவு களிமண்.

06. காந்தத்தைக் கிட்டக் கொண்டுவரும் போது பின்வரும் எப்பொருள் கவரப்படும் ?
    (1) பித்தளை (2) அலுமினியம் (3) இரும்பு (4) வெள்ளி

07. உயரத்திலிருந்து விழுந்து விலா எழும்பு உடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி
    (1) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தைத் துணியினால் கட்டுதல்.
    (2) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தைத் தூய நீரினால் கழுவுதல்.
    (3) நபரை அசைக்காமல் சமதள இடத்தில் வைத்திருத்தல்.
    (4) வெந்நீரைக் குடிக்கக் கொடுத்தல்.

08. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அதிவேக வீதி யாது ?
    (1) வடக்கு அதிவேக வீதி (2) தெற்கு அதிவேக வீதி
    (3) கட்டுநாயக்கா அதிவேக வீதி (4) கொழும்பு – கண்டி அதிவேக வீதி

09. குழு விளையாட்டுகளில் இருக்ககூடாத இயல்பு பின்வருவனவற்றுள் எது ?
    (1) தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல்.
    (2) தம் பணியைப் பொறுப்புடன் நிறைவேற்றல்.
    (3) தமக்கு விரும்பியவாறு செயற்படுதல்
    (4) வெற்றியையும் தோல்வியையும் ஏற்றுக்கொள்ளல்.


Tamil Study

10. நான்கு இதழ்கள் உள்ள மலருக்கு உதாரணம்
(1) மல்லிகை (2) காட்டு மல்லிகை (3) வெட்சி (4) பவளமல்லிகை

11. இலங்கைக்கே உரிய தாவரம் யாது ?
(1) குப்பைமேனி (2) நிலவேம்பு (3) சாத்தாவாரி (4) வல்லாரை

12. விலங்குகளின் மூலம் பரம்பல் அடையும் வித்துகள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க?
(1) இரப்பர், ஆவரை, கடல்மாங்காய்
(2) கடல்மாங்காய், காசித்தும்பை, மரமுந்திரிகை
(3) குன்றிமணி, காசித்தும்பை, ஒட்டுப்புல்
(4) மரமுந்திரிகை, புலிநகம், ஒட்டுப்புல்

13. ரின் மீனைக் கொள்வனவு செய்யும்போது **குறைந்த அளவு** கவனஞ் செலுத்தப்பட வேண்டிய விடயம்
(1) காலாவாதியாகும் திகதி (2) பொருள் கொள்வனவு செய்யப்படும் கடை
(3) பொருளின் தரம் (4) பொருளின் வர்த்தகப் பெயர்

14. தனது வீடாகப் புற்றை அமைக்கும் விலங்கு யாது ?
(1) குளவி (2) பாம்பு (3) கறையான் (4) தேன்

15. பயிர்களை சேதப்படுத்தும் விலங்கினமாக **அமையாதது**
(1) பனிப்பூச்சி (2) அழுக்கணவன் (3) நெல் தண்டுகோதி (4) தும்பி

16. நாற்றுமேடைகளை அமைத்து நாற்றுகள் பெறப்படும் பயிர் வகை
(1) வத்தாளை (2) கங்குன் (3) மிளகாய் (4) புடோல்

17. நுகத்தடி பயன்படுதப்படுவது
(1) மட்பாண்டக் கைத்தொழிலில் (2) விவசாய கைத்தொழிலில்
(3) ஆடை கைத்தொழிலில் (4) உலோகக் கைத்தொழிலில்

18. பிழையான கூற்றைத் தெரிவு செய்க .
(1) இந்தியாவிற்குத் தெற்கே இலங்கை அமைந்துள்ளது.
(2) இலங்கை ஆபிரிக்காக் கண்டத்தைச் சேர்ந்தது.
(3) இலங்கை கண்ணீர்த்துளி வடிவமுள்ள தீவாகும்
(4) இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது.

19. தென் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு நகரம்
(1) களுத்துறை (2) பலாங்கொடை
(3) அம்பலாங்கொடை (4) மொனராகலை

